Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.39/2023**

**2024-ம் ஆண்டு ஜுன் மாதம் 06-ம் தேதி வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 10 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 10 | தொழில் | - | ஓட்டுநர் |
| பெயர் | - | சுரேஷ் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | செல்லத்துரை | சமயம் | - | |
| கிராமம் | - | காமராஜ் நகர் | வயது | - | 45 |
| சாதி | - | | | | |

**06.06.2024**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

1. நான் வால்பாறை காமராஜ் நகரில் வசித்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். கடந்த 19.01.2023 அன்று இரவு 8.45 மணிக்கு எனது கொழுந்தியாள் எனக்கு போன் செய்து எனது மகன் மகேஷ் விபத்தில் அடிபட்டு வால்பாறை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்து இருப்பதாக சொன்னார். நான் மருத்துவமனைக்கு சென்றேன். எனது மகன் படுத்தநிலையில் இருந்தார். கையில் சிராய்ப்பு காயமும் உயிர் தளத்தில் காயமும் இருந்தது. மருத்துவரிடம் விசாரித்தபோது எனது மகன் இறந்துவிட்டதாக சொன்னார்.

2. எனது மனைவியிடம் என்ன நடந்தது என்று விசாரித்தபோது மகேஷ், அஸ்வின் மற்றும் மணிகண்டனுடன் சிங்கோனாவிற்கு செல்லும் போது சிறுகுன்றா ரோட்டில் பைக் ஸ்கிட்டாகி கீழே விழுந்ததாக சொன்னார். வால்பாறை போலீசார் விசாரித்தபோது எனது மகனின் பிரேதத்தை அடையாளம் காட்டினேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில் இருந்து குறுக்கு விசாரணை இல்லை என்றார்.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

CC.No.39/2023

**2024-ம் ஆண்டு ஜுன் மாதம் 06-ம் தேதி வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 11 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 11 | தொழில் | - | சமையல் வேலை |
| பெயர் | - | ஸ்டெல்லா | வட்டம் | - | வால்பாறை |
| க/பெ | - | செல்லத்துரை | சமயம் | - | |
| கிராமம் | - | காமராஜர் நகர் | வயது | - | 63 |
| சாதி | - | | | | |

**06.06.2024**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

நான் வால்பாறை காமராஜர் நகரில் வசித்து அய்யர்பாடி காட்டேஜில் சமையல் வேலை செய்து வருகிறேன். கடந்த 19.01.2023 அன்று எனது பேரன் மகேஷ், அப்பு, மணிகண்டன் ஆகியோருடன் ஈட்டியாரில் உள்ள மணிகண்டன் வீட்டிற்கு கொண்டுவந்து விடுமாறு மகேஷை ஸ்கூட்டி வாகனத்தில் கூட்டிச்சென்றுள்ளார்கள். ஸ்கூட்டியை அப்பு என்பவர் ஓட்ட எனது பேரன் மகேஷ் பின்னால் அமர்ந்து சென்றுள்ளார்.

2.அன்றைய தினம் இரவு 7.30 மணிக்கு எனது மருமகளின் சகோதரி எனக்கு போன் செய்து எனது பேரனுக்கு விபத்து ஏற்பட்டதாக கூறினார். நானும் எனது மகன் சுரேஷ்சும் அரசு மருத்துவமனை வால்பாறைக்கு சென்று எனது பேரனை பார்த்தபோது எனது பேரனுக்கு கையில் சிராய்ப்பு காயமும்., உயிர்நாடி அடிபட்டு பேண்டு கிளிந்த நிலையில் நனைந்து இருந்தது. விபத்து தொடர்பாக நான் விசாரித்தபோது போலீசார் எனது பேரன் சென்ற இரு சக்கர வாகனத்தை துரத்தி சென்றுள்ளார்கள் அதற்கு பயந்து வாகனத்தை வேகமாக ஓட்டிச்சென்று கீழே விழுந்துள்ளார்கள். மருத்துவமனைக்கு எனது பேரனை கொண்டுவரும்போது நல்ல நிலையில் வந்துள்ளார். மருத்துவமனையில் தான் எனது பேரன் இறந்துள்ளான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

விபத்தின் போது வாகனத்தை அப்பு ஓட்டிச்சென்றாரா, மணிகண்டன் ஓட்டிச்சென்றாரா என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலீசார் விரட்டிச்செல்லவில்லை என்றால் விபத்து நடந்து இருக்காது என்றால் சரிதான். இந்த விபத்திற்கு காரணம் அப்பு இல்லை என்றாலும், போலீசார் விரட்டிச்சென்றதால்தான் காரணம் என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை** : இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை